[4th March 1964

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், ஆலங்குடி தாலூகா

* 146 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆலங்குடியில் இருக்கவேண்டிய தாலூகா மாஜிஸ்டிரேட், சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் தலைமை இடமான ஆலங்குடியில் இல்லாது புதுகோட்டையிலே உள்ளதால் அவைகளை ஆலங்குடிக்கு மாற்றிக் கொடுக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No, Sir.

திரு. பி. முருகையன் : இந்த மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் இதற்கு முன்பு பரமக்குடியிலும், ஆலங்குடியிலும் இருந்தது. இப்போது அதை மாற்றி புதுக்கோட்டையில் வைத்திருக்கிறார்கள். தாலூகா தலைநகரமாக இருக்கின்ற ஆலங்குடியில் இப்போது கோர்ட் இல்லாததால், சுற்றுவட்டாரத்திலுள்ள மக்கள் உடனடியாக நீதிமன்றத்திற்கு வந்து தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கோர்ட்டுகளை ஆலங்குடியில் அமைப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது அப்படி உத்தேசம் எதுவுமில்லை. இவ்விதம் மாற்றி அமைக்க வேண்டும் என்று ஏதாவது ரிப்ரசென்டேஷன் அனுப்பினால் அதை ஹைகோர்ட்டுக்கு அனுப்பி அவர்களுடைய உசிதம்போல் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

New Sub-Registry Offices.

* 147 *Q.*—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Information be pleased to state—

(*a*) whether Sub-Registry Offices were opened newly during 1963 ; and

(*b*) if so, where?

கனம் திரு. கோ. பூவராகன்: (அ) & (இ) 1—4—1963-லிருந்து 1963-ம் காலண்டர் ஆண்டில் இம்மாநிலத்தில் அடியிற்கண்ட சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகங்கள் திறக்கப்பட்டன :—

1. மதகுப்பட்டி (புதுக்கோட்டை ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

2. உடங்குடி (பாளையங்கோட்டை ரிஜிஸ்ட்ரேஷன் மவாட்டம்).

3. குள்ளன்சாவடி (சிதம்பரம் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

4. பரூர் (சேலம் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

5. சத்தியமங்கலம் (கடலூர் ரிஜிஸ்ட்ரேஷன் மாவட்டம்).

4th March 1964]

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், நடப்பு ஆண்டில் புதிதாக ஏதாவது சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறக்கவேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதில் மதுரை மாவட்டத்தில் மலைப்பிரதேசங்களில் ஏதாவது ரெஜிஸ்டிரார் ஆபீஸ் திறப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : புதிதாக சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் நடப்பு ஆண்டிலும் திறக்கவேண்டும் என்ற உத்தேசமிருக்கிறது. எந்தெந்த மாவட்டத்தில் என்று இப்போது சொல்வதற்கில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஸார், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் ஏதாவது சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறப்பதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போது என்னிடம் இருக்கின்ற தகவல்கள் 1963-ம் ஆண்டில் எத்தனை ஆபீஸ்கள் திறக்கப்பட்டன என்பதுபற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற விபரங்களை அறிந்து கொள்ள தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, புதிதாக சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறக்கப்போவதாக அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். அதேசமயத்தில் இப்போது சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ் இருக்கின்ற பல பழைய கட்டிடங்கள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றன. பழைய கட்டிடங்கள் எல்லாம் ஓட்டை ஓடிசல்களான நிலையில் இருக்கின்றன. உதாரணமாக மயிலம் போன்ற இடங்களிலுள்ள ஆபீஸ்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இதை பழுது பார்க்கின்ற வேலையில் சிறிது ஊக்கம் காட்டி, பழைய கட்டிடங்களை எல்லாம் நல்ல முறையில் சீர்படுத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அரசாங்க கட்டிடங்களை எல்லாம் ஆண்டு தோறும் ஒரு ப்ரோகிராம் போட்டு, அதன்படி ரிப்பேர் செய்து வருகிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று ஏதாவது குறிப்பாக இன்னின்ன இடங்களுக்கு உடனடியாக செய்யவேண்டும் என்று எழுதி அனுப்பினால் அதைப் பற்றி கவனிக்கலாம்.

திரு. அ. துரையரசன் : தலைவர் அவர்களே, புதிதாக சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் திறப்பதற்கு பஞ்சாயத்து மன்றங்களின் ஒப்புதல் பெறவேண்டும் என்றிருக்கிறது. இதன் காரணமாக ஒப்புறுதி கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இலாகாக்கள் மூலமாக புள்ளிவிவரங்களை தயார் செய்து அதன் மூலமாக புதிதாக ரெஜிஸ்டிரார் ஆபீஸ்களை திறப்பதற்கு உத்தரவு போட முடியுமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போதும் இலாகாக்கள் மூலமாக புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆகவே இப்போதுள்ள உத்தரவே போதும் என்று நினைக்கிறேன்.